<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
<u>MCOP . No.26/2025</u>

**<u>நாள் : 10.04.2026</u>**

**எ.ம.சா.** 1 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சேதுபதி | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.சுப்பிரமணி | வயது | : | 32 |
| ஊர் | : | திம்மாம்பேட்டை | தொழில் | : | முதல் நிலை காவலர் |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

நான் திம்மாம்பேட்டை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணி புரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து திம்மாம்பேட்டை ஆய்வாளருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையை பெற்று அதிகாரமளிப்பு கடிதத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி அழைப்பாணையில் திம்மாம்பேம்டை காவல்நிலைய குற்ற எண் 59/2023 வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களை கொண்டு வருமாறு பணிக்கப்பட்டு இருந்தது. எ.சா. 1 க்கு வழங்கப்பட்ட அதிகாரமளிப்பு கடிதம் எ.ம.சா.ஆ.1. குற்ற எண். 59/2023 சம்பந்தப்பட்ட ஆவணங்கள் உண்மை நகல் எ.ம.சா.ஆ.2 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. விபத்தில் சம்பந்தப்பட்டுள்ள வாகனம் TN 83 MB 4928 என்ற பதிவு எண் கொண்ட மகேந்திரா பிக்கப் வாகனம் மட்டுமே ஆகும். மேற்படி வாகனம் சரக்கு வாகனமாகும். மேற்படி வாகனத்தில் பயணித்து விபத்துக்குள்ளான நபர் அதன் பின்பகுதியில் அமர்ந்து பயணித்ததாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. மூலக்கொல்லை வட்டம்,

கனகநாச்சியம்மன் கோவிலிலிருந்து ஈமக்காரியங்கள் முடித்துவிட்டு விபத்தில் காயம்பட்டவர் அவரது உறவினர்களுடன் வீட்டிற்கு திரும்பி வரும்போது விபத்து நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது. மேற்படி விபத்தில் மனுதாரரை தவிர வேறு நபர்களுக்கு காயம் ஏற்படவில்லை. பிக்கப் வாகனத்தை ஓட்டிய நபர் வேகமாக ஓட்டியதால் வாகனத்திலிருந்து மனுதாரர் கீழே விழுந்ததாக சொல்லப்பட்டுள்ளது. மனுதாரர் சாமான்களை ஏற்றிச்சென்றதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இறுதி அறிக்கையின்படி மனுதாரரான ரஜினி என்பவருக்கு மட்டும் காயம் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கையானது இதச பிரிவு 279, 337 @ 279, 338 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**:

புகார் கொடுத்த பரிமளா பிக்கப் வாகனத்தில் பயணிக்கவில்லை என்றால் சரிதான். அந்த வகையில் பரிமளா விபத்தை கண்ணுற்ற நபர் அல்ல என்றால் சரிதான். விபத்தானது பிக்கப் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டதாகத்தான் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**நீதிமன்ற அனுமதியுடன் மறுவிசாரணை**

குற்ற இறுதி அறிக்கையில் கண்ணுற்ற சாட்சிகளை விசாரித்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான்.

**மறுகுறுக்கு விசாரணை** – இல்லை

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.